# காலாண்டுத் தேர்வு - 2023

## தமிழ்

வகுப்பு : 10 | பதிவு எண் :
காலம் : 3.00 மணி | மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15x1=15

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றை குறிக்கும் பயிர்வகை
அ) குலை வகை ஆ) இலை வகை இ) மணிவகை ஈ) கொழுந்து வகை

3. <u>பெரிய மீசை சிரித்தார்</u> வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது ?
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

4. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது ..............................
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்

5. விருந்தினரைப் பேணுவதற்கு பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு" இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை .......
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) அல்லிலும் விருந்து
இ) இன்மையிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

6. பரிபாடல் அடியில் விசும்பும் இசையும் என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது ?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
இ) வானத்தையும் பூமியையும் ஈ) வானத்தையும் பேரொலியையும்

7. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா"? என்று வழிப்போக்கர் கேட்டது ................. வினா "அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ........................... விடை.
அ) ஐய வினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியா வினா, சுட்டு விடை ஈ) கொளல் வினா, இனமொழி விடை

8. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் தெருளை" ............. என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது ?
அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

9. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .....................
அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

10. மலர்கள் தரையில் நழுவும் எப்போது ?
அ) அள்ளி முகர்ந்தால் ஆ) தளரப் பிணைத்தால்
இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

11. முல்லை நிலத்தின் பெரும்பொழுது.....................
அ) கார்காலம் ஆ) குளிர்காலம் இ) கோடைகாலம் ஈ) பனிக்காலம்

**பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு நடுங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல் அன்றோ
ஏழமை வேடனிறந்தில னென்றெனை யேசாரோ.

12. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ?
அ) கம்பராமாயணம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

13. இப்பாடலின் ஆசிரியர் யார் ?
அ) கம்பர் ஆ) இளங்கோவடிகள் இ) பாரதியார் ஈ) திருத்தக்க தேவர்

14. 'திரை' என்னும் சொல்லின் பொருள் ........................
அ) யானை ஆ) கடல் இ) அலை ஈ) படை

15. நெடும் படை – இலக்கணக்குறிப்பு தருக.
அ) வினைத்தொகை ஆ) பண்புத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். 4x2=8**
**21வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் இலா.
ஆ) குறவர்கள் மலையில் கிழங்கு அகழ்ந்தனர்.

17. மாஅல் பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.

18. இறடிப் பொம்மல் பெறுகுவீர் – இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

19. செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச்சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

21. "பொருள்" – என முடியும் திருக்குறளை அடிபிறழாமல் எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்கவும். 5x2=10**

22. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றி தொடர்களை இணைத்து எழுது.
அ) கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள்.
ஆ) பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித்தேர்வில் வென்றார்.

23. பழமொழிகளை நிறைவு செய்க.
அ) உப்பிட்டவரை ........................................ ஆ) விருந்தும் ..................................

24. கொடுக்கப்பட்ட இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) இயற்கை–செயற்கை ஆ) விதி – வதி

25. பதிந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

26. கலைச்சொற்கள் தருக.
அ) Space Technology ஆ) Emblem

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளிக்கான மாற்றுவினா
விடுபட்ட எழுத்துகளை நிரப்புக.
அ) இ ..............கு (பறவையிடம் இருப்பது) ஆ) வா .............. (மன்னனிடம் இருப்பது)

27. தொடர்களில் உள்ள எழுவாயை செழுமை செய்க.
அ) கல்வியே ஒருவருக்கு உயர்வு தரும். ஆ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

28. தொழிற் பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.
அ) பசுமையான ..................ஐக் ...................... கண்ணுக்கு நல்லது. (காணுதல், காட்சி)
ஆ) பொதுவாழ்வல் ......................... கூடாது. ...........................இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல், நடிப்பில்)



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

29. புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது. இதுபோல் இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்குச்செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பாய் ?

31. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

பருப்பொருள்கள் சிதறும்படியாக பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக்காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக நடந்த இந்த பெரிய உலகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) புவி உருவானபோது எப்படி இருந்தது ?
ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது ?
இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

### பிரிவு - 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

**34 வது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக்காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

33. “மாளாத காதல் நோயாளன் போல்” – என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) “விருந்தினனாக ஒருவன் ..................” எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடல்.

( அல்லது )

ஆ) “தண்டலை மயில்களாடத் ................” எனத் தொடங்கும் கம்பராமாயணப்பாடல்.

### பிரிவு - 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2x3=6

35. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

36. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார். – இக்குறளுக்குஅலகிட்டு வாய்பாடு தருக.

37. தற்குறிப்பேற்றணியை சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

( அல்லது )

இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்கு செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் விளக்குக.

39. மாநில அளவில் நடைபெற்ற “மரம் இயற்கையின் வரம்” எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

( அல்லது )

உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

40. காட்சியைக் கண்டு
கவினுற கவிதை ஒன்றை எழுதுக.



41. தனித்தாளில் கொடுக்கப்பட்டுள்ள நூலகர் படிவத்தை நிரப்புக.

42. அ) புயலின்போது நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைபடுத்தி எழுதுக. ( அல்லது )

ஆ) மொழி பெயர்க்க.

1. If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart - Nelson Mandela.
2. Language is the road map of a culture It tells you where is people come from and where they are going - Rita Mea brown.

செவி மாற்றுத் திறனாளிக்கான மாற்று வினா.

குலேசபாண்டியன் என்னும் பாண்டிய மன்னன் மிகுந்த கல்வியறிவு மிக்கவன் எனக் கற்றோர் கூறக்கேட்டார். இடைக்காடனார் என்னும் புலவர். கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின்மேல் அன்புகொண்ட அப்புலவர் மிகவும் இனிய தேன் ஒழுகும் வேப்பம்பூமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்கு சென்று தான் இயற்றிய கவிதையை படித்தார்.

1. மிகுந்த கல்வியறிவு மிக்க பாண்டிய மன்னன் யார் ?
2. கபிலர் மீது அன்பு கொண்ட புலவன் பெயர் என்ன ?
3. வேப்பம்பூ மாலையை அணிந்த மன்னன் எந்த நாட்டை சார்ந்தவன் ?
4. கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர். இத்தொடரில் இடம் பெறும் இலக்கண குறிப்புகளை எழுதுக.
5. பாண்டிய மன்னன் அவையில் கவிதையைப் பாடியவர் யார் ?

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3x8=24**

43. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக. ( அல்லது )
நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்கு பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

44. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. ( அல்லது )
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45. “சான்றோர் வளர்த்த தமிழ்” என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக. ( அல்லது )
“விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்” என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்றை எழுதுக.

--------



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

# நூலக உறுப்பினர் படிவம்

........................................ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ........................................

## உறுப்பினர் சேர்க்கை அட்டை

அட்டை எண் : உறுப்பினர் எண் :

1. பெயர் : ........................................ 2. தந்தை பெயர் : ........................................
3. பிறந்த தேதி : ........................................ 4. வயது : ........................................
5. படிப்பு : ........................................ 6. தொலைபேசி எண் : ........................................
7. அஞ்சல் முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) : ........................................

........................................................................................................................

நான் ........................................ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ.................... சந்தா தொகை ரூ. .................... ஆக மொத்தம் ரூ. .................... ரொக்கமாகச் செலுத்துகிறேன்.

நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : தங்கள் உண்மையுள்ள

நாள் :

திரு / திருமதி / செல்வி / செல்வன் ........................................ அவர்களை எனக்கு நன்கு தெரியும் என சான்று அளிக்கிறேன்.

அலுவலக முத்திரை

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com